**இந்திய தேசிய திருச்சபை மன்றம் (NCCI)**
**மாற்றுத்திறனாளிகளுக்கான இந்திய ஒருங்கிணைந்த சபைகளின் குழுமம்**
**மாற்றுத்திறனாளிகளுக்கான மன்றாட்டு ஞாயிறு**

## கருப்பொருள்: கூரையின் கீழ் - படிக்கட்டுகளுக்கப்பால்

**வழிபாடு நடத்துபவர்:**

நம்மை படைத்த கடவுள் நம்மை இங்கு கூட்டிச் சேர்த்துள்ளார். அவரது ஈவுகளினாலும், கிருபைகளினாலும், மாற்றுத்திறனாளிகளுக்காக மன்றாடுவதில் நம்மை இணைத்துள்ளார். அனைத்து நபர்களும் திருச்சபையிலும், சமூகத்திலும் ஒன்றாக கூடி சமுதாயத்தில் வாழ ஒன்றாக அழைக்கப்பட்டிருக்கிறோம். ஆகவே நாம் ஒருவரிலொருவர் கை குலுக்கி அல்லது கரம் கூப்பி கர்த்தருக்கு ஸ்தோத்திரம் என்று வாழ்த்துக் கூறுவோம்.

**ஆராதனைக்கு அழைப்பு:**
**வழிபாடு நடத்துபவர்:**
கர்த்தாவே உம்மை ஆவியோடும் உண்மையோடும் இணைந்து வழிபடுவது எவ்வளவு எழுப்புதலாயிருக்கிறது. உம்முடைய சமூகத்தில் பல திறன்களுடையவர்களாக படைக்கப்பட்டு உம்மை ஆனந்த சத்தத்துடன்பாடி உம்முடைய பிரசன்னத்தில் நிற்கிறோம்.

**சபையார்:**
எங்களை தமது சாயலாக உமது அன்பை வெளிப்படுத்த எங்களை படைத்தீரே. நாங்கள் உம்மை ஒரே மந்தையாக இணைந்து ஆவியோடும், உண்மையோடும், சுதந்தரத்தோடும், ஒரே சிந்தையோடும், எங்களில் பல திறமைகள் உள்ளவரும், இல்லாதவரும் ஒன்று கூடி உம்மை வழிபட வந்துள்ளோம்.

**வழிபாடு நடத்துபவர்:**
கர்த்தாவே உமது பரிசுத்த ஸ்தலத்தில் அனைவரையும் வரவேற்கிறோம். இங்கு பல வேறுபாடுகள், தடைகள் எனும் சுவர்கள் இல்லை. எனவே உமது அனைத்து வார்த்தைகளையும் பேசுவதைக் கேட்பதற்கு எங்களால் முடியும்.

**சபையார்:**
எங்கள் கர்த்தாவே, நாங்கள் ஒவ்வொருவரையும் ஐக்கியத்தில் அரவணைத்துக் கொள்ள வழிநடத்தும். உம்மை சுதந்தரமாக வழிபட துணைபுரியும். கிறிஸ்துவுக்குள் ஒரே சரீரமாக உமது பாரபட்சமன்ற அன்பின் பயணத்தை உமது கிருபையால் தொடர்ந்து நிற்க உமது கிருபை அருளும்.

**வழிபாடு நடத்துபவர்:**
எனவே நாம் ஒருவருவடைய உடல் பலன், திறமை ஆவி இவற்றில் வேறுபாடு இருந்தாலும் நியாயத்தை நிலைநிறுத்த துணை புரியும். நம் அனைவரையும் ஒரே கூரையின் கீழ் நம்மை அழைத்திருக்கிறார். கிறிஸ்துவின் ஒரே சரீரமாக உமது இரட்சிப்பின் ஈவை தந்து உதவ உம்மை நாடுகிறோம்.

திருச்சபை அனைவருக்கும், அனைவருக்காகவும் உள்ளது என்பதை உணர்ந்து ஒருபடி முன்னேறிச் செல்ல வழிகாட்டியருளும்.

அனைவரும் ஆமென்….

**ஜெபம்**



created with nitro PDF professional
download the free trial online at nitropdf.com/professional

சிருʿடிகராகிய கர்த்தாவே உமது ஆலயத்தில் உமது தூய பெயரால் ஒன்று கூடி வந்துள்ளோம். ஆனைத்து விசுவாசிகளின் ஐக்கிய சமூகம் உம்மை போற்றும்படி வந்துள்ளோம். வாழ்வாகவும், வழியாகவும் வந்துள்ள கடவுளே நாங்கள் உமது சாயலில் படைக்கப்பட்டவர்கள். உமது கனிவு, இரக்கம், கிரியை செய்யும் ஆற்றல் பிரதிபலிக்கச் செய்தருளும். அப்பொழுது நாங்கள் உம்மைப் பற்றிய வெளிப்பாட்டை புரிந்து கொள்ளவும், ஒருவரோடொருவர் எந்த வித்தியாசமுமின்றி ஏற்றுக் கொள்ள அருள் செய்வீராக!

இந்த அருட்பணியை எங்களிடம் ஒப்படைத்துள்ளீர். தனிச்சிறப்பான தாலந்துகளையும் தந்து, எங்களுக்கு நீர் அருளிச் செய்த ஆசீர்வாதத்தை உம்மில் இருக்கும்போது நாங்கள் ஒருபோதும் தனித்து விடப்படவில்லை. அல்லது இயலாதவராகவும் இல்லை. மாற்றுத்தாலந்துகள் பெற்றிருக்கும் அனைவரையும் நீர் தலையாக உள்ள உடலில் இணைந்துள்ளோம். உமது ஞானத்திலும், கிருபையிலும் நம்பிக்கை கொண்டு இயேசு இரட்சகரின் பெயரில் இவற்றை மன்றாடுகிறோம். ஆமென்….

**ஆரம்ப பாடல் ---**

**ஸ்தோத்திர ஜெபம்**

எங்களோடு இருந்து கனிவிரக்கம் உள்ளவராக தேவரீர் எங்களை ஒரே கூரையின் கீழ் இணைத்திருக்கிறீர்.. உமது பரிவுள்ள அன்பு நீதி, வளங்கள் எல்லாருக்கும், குறைவுடையவர்களுக்கும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. நாங்கள் எங்களது அழைப்பை ஏற்று கிரியை செய்ய அருள்புரிய ஜெபிக்கிறோம். ஒவ்வொருவரையும் தொடர்ந்து எங்களது மத்தியில் உள்ள மாற்றுத் திறனாளிகளை முன்னேற்ற மன்றாடுகிறோம். எங்களது அச்சங்கள், பொறாமைகள், இவற்றை விலக்கியருளும்.

கிறிஸ்துவின் சரீரம் மந்தையில் உள்ள ஒரு ஆடு தனியே விடப்பட்டாலும் கூட அது நிறைவு பெறாது என்பதை நாங்கள் அறிந்து கொள்ள துணைபுரியும். அத்துடன் அனைவருக்கும் வரங்களும், திறன்களும் உண்டு. அவற்றை பகிர்ந்து கொண்டு செயல்பட அருள்புரியும். நற்செய்தியையும் கண்டுணர கருணை புரியும். இவை அனைத்தையும் நம்பிக்கையுடன் எங்கள் கர்த்தரும், இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் வழியாய் உம்மை வேண்டுகிறோம்.

**சுருக்க ஜெபம்**

இறைவனே, கர்த்தராகிய உம்மிடத்தில் எங்கள் மன்றாட்டுகளை ஏறெடுக்கிறோம். நாங்கள் உம்மில் சார்ந்திருப்பதை உணர்கின்றோம். எங்களது சபைகளில் அனைவரையும் வரவேற்கின்றோம். எல்லா மக்களையும், இயலாத நிலையில் உள்ளவர்களையும் உம்முடைய படைப்பின் அருமையையும் கருதி அவர்களுக்கு உதவி புரிய எங்களைக் காத்தருளும். அனைவரையும் எங்கள் சகோதர சகோதரிகளாக ஏற்றுக் கொள்கிறோம். அறைகூவல்களையும் சந்திக்கிறோம். மேலும், கிறிஸ்துவில் விசுவாசம் கொள்ளும் மக்களாக உள்ளோம். நாங்கள் கடவுளின் குமாரர், குமாரத்திகளுமாய் இருக்கிறோம். இந்த கண்ணியத்தை நாங்கள் உணரச் செய்தருளும். கடவுளின் மக்களாகிய நாங்கள், இயலாத நிலையில் உள்ளவர்களையும், அவர்களுடை திறமைகளையும் ஏற்றுக் கொள்கிறோம். உமது கரங்கள் ஒவ்வொரு மனிதனின் வாழ்விலும் அதன் அழகையும் வெளிப்படுத்துவது, மனிதத் தடைகளுக்கு அப்பாற்பட்டு உள்ளது. ஒப்புரவாக்குதலின் கடவுள் நம் அனைவரையும் ஒன்றாக இணைத்து நாம் தனித்தனியே ஒவ்வொரு சிறந்த நபராக அவரைத் துதிக்க நம்மை இணைப்பாராக! ஆமென்….

மாறி, மாறி வாசிக்க வேண்டிய சங்கீதம் 24
பரிந்துரைக்கப்பட்ட திருமறைப்பாடங்கள்
யாத் 4:10-12
1கொரி 12:12-27
மத்தேயு 7:1-15

**பிரசங்கம்**



created with nitroPDF professional
download the free trial online at nitropdf.com/professional

**1.கடவுளின் பார்வையில் சமம்:**

ஒரு நோக்கத்துடன் கடவுளால் உருவாக்கப்படுதல்
கடவுளின் அருளால் வாழ்தல்
கடவுளின் ராஜ்யத்தின் வாரிசுகள்

**2. அனைவரும் தனித்தன்மையுடைய முக்கியமானவர்கள்**

உடலின் பல்வேறு பகுதிகள்
ஒவ்வொரு பகுதியும் முக்கியமானவை, மதிக்கப்படவேண்டியவை
ஒருவரையொருவர் கவனித்து, பாடுபட்டு, சந்தோ'ப்பட்டு வாழ்தல்

**3. எல்லோரும் கடவுளின் இராஜ்யத்தில் பங்களிக்கக் கூடும்**

1. வேதத்தில் உதாரணங்கள்
   மோசேயின் மந்த வாய்
   பவுலின் கண் பிரச்சனை
   சகேயுவின் குள்ள உடல்

2. ஊனமுற்றவர்கள் திருச்சபையில் பங்காகிறார்களா?
   ஊக்குவிக்க வேண்டும்
   திறன் மற்றும் தாலந்துகளை பயன்படுத்த வேண்டும்
   வாய்ப்பளிக்க வேண்டும்

**விசுவாச அறிக்கை:**

கடவுளின் படைப்பில் தனிப்பட்ட முறையில் ஒவ்வொருவரும் முறையாக சிரு'டிக்கப்பட்டு, தனித்தன்மை கொண்ட உடல், சிந்தனை, ஆவி மூலம் ஜீவன் தந்த அவரை வழிபட அழைக்கப்பட்டதை நம்புகிறோம். ஓவ்வொருவரும் திறமை கொண்டவர்கள். முழுமையை நாட விரும்புகிறோம். நாங்கள் குறைபாடு உடையவர்கள். தன்மை மற்றும் முழுமையற்றவர்கள். பாதிப்புகளிலிருந்து பாதுகாக்கப்பட்டு கடவுளின் வீட்டில் வாக்களிக்கப்பட்ட பாத்தியத்தில் உரிமை கொள்ளுகிறோம். அழைப்பு, உறுதிப்படுத்தல் கடவுளின் அன்பின் மூலம் மாற்றப்படுவதை நம்புகிறோம்.

கிறிஸ்துவின் மாதிரியைப் பின்பற்றி எல்லோரையும் நாம் எப்படி மற்றவர்களால் நடத்தப்பட வேண்டுமென்று எதிர்பார்க்கின்றோமோ அதன்படி குறைபாடு கொண்டவர்களிடம் பேசவும், எங்களது குடும்ப உறுப்பினர்களாக மற்றவர்களிடம் அன்புடன் பழகவும், உதவி செய்யும். பொறுமையாய் நடந்து கொள்ள வேண்டுமென்பதை நம்புகிறோம் மற்றும் குறைபாடு கொண்டவர்களை பேச அனுமதித்து, மதித்து நடக்க வேண்டும் என்பதனை உறுதிப்படுத்துகிறோம். வயது வந்த குறைபாடு கொண்டவர்களை குழந்தைகளைப்போல நடத்த மாட்டோம் என உறுதி கூறுகிறோம்.

திருச்சபையின் உண்மையான வழிபாடு, அர்த்தமுள்ள கூட்டுறவு, உடல் மற்றும் மன குறைபாடுள்ளவர்களை ஏற்றுக்கொள்ளும் தன்மையில் உள்ளது என நம்புகிறோம். திருப்பணியில், பேராயர்களாக, குருக்களாக, சுவிசே'கனாக அளிக்கப்பட்ட அதிகாரம் குறைபாடு கொண்டவர்களின் நலத்திற்காக பயன்படுத்த வேண்டுமென்று நம்புகிறோம். ஆமென்….

**விளம்பரங்கள்:**

**காணிக்கைப்பாடல்:**

**பாவ அறிக்கை:**



created with nitroPDF professional
download the free trial online at nitropdf.com/professional

**வழிபாடு நடத்துபவர்:**

இயேசுவானவர் கூறியது, நீங்கள் விருந்து அளிக்கும்போது ஏழைகள், ஊனமுற்றோர், கால் நடக்க முடியாதோர், பார்வையற்றோர் ஆகியோரை அழையுங்கள். நீங்கள் ஆசீர்வதிக்கப்படுவீர்கள்.

**சபையார்:** அனைத்திற்கும் கடவுளே நாங்கள் எங்களது விழாக்களிலும், கொண்டாட்டங்களிலும் மாற்றுத்திறனாளிகளை அழைப்பதில் தவறிவிட்டோம். தேவரீர் விரும்புபவர்களை அழைக்காமல், எங்களுக்கு வேண்டியவர்களை அழைத்தோம்.

**அனைவரும்:** எங்களது நியாயமற்ற கொண்டாட்டங்களை மன்னித்தருளும்.

**வழிபாடு நடத்துபவர்:**
இயேசுவானவர், திமிர்வாதக்காரனிடம், அவன் அங்கு ஏற்கனவே அதிக காலமாக நோயுற்றவன் என்பதை அறிந்திருந்தார். அவனிடம் "நீ குணமாக விரும்புகிறாயா?"

**சபை:** அன்பின் கடவுளே அநேக மக்கள் எங்களைச் சுற்றி குறைபாடுடையவர்களாக இருக்கிறார்கள். ஆனால், அவர்கள் குணமடைவதற்கு உதவி செய்ய நாங்கள் முயற்சி எடுப்பதில்லை. அவர்களைப் பற்றி பேசவோ, அல்லது கேட்கவோ தவறிவிட்டோம்.

**அனைவரும்:** எங்களது கரிசனையற்ற நிலைப்பாட்டை மன்னித்தருளும்.

**ஆராதனை நடத்துபவர்:** சவுல், தரையிலிருந்து எழுந்தார். அவரது கண்கள் திறந்திருந்தாலும் அவரால் பார்க்க முடியவில்லை. அவருக்கு கைலாகு கொடுத்து அவரை தமஸ்குவுக்கு அழைத்துச் சென்றார்கள்.

**சபை:** தேவரீர் உமது சபையை உடன் செல்லும் சபையாக அழைத்தீர். ஆனால் அநேக சமயங்களில் நாங்கள் பலவீனரை முடியாதவர்களை விட்டு விட்டுச் செல்கின்றோம். அவர்களுக்கு உதவிக்கரம் கொடுப்பதில்லை. வெறும் பார்வையாளர்களாக மாத்திரம் இருக்கின்றோம்.

**அனைவரும்:** உமது அருட்பணியை மறந்த எங்களை மன்னித்தருளும்.

**ஆராதனை நடத்துபவர்:** பேதுருவும், யோவானும், தேவாலய அலங்கார வாசலில் முடமாய் இருப்பவரைக் கண்டு கரங்களை நீட்டி வெள்ளியும் பொன்னும் என்னிடத்தில் இல்லை. ஆனால், நசரேயனாகிய இயேசுவின் நாமத்தினாலே நீ எழுந்து நட என்று கட்டளையிட்டனர்.

**சபை:** இன்றும் நம் மத்தியில் அநேகர் இவ்வாறு தேவாலய அலங்கார வாசலிலே அமர்ந்திருக்கிறார்கள். ஆனால், நாங்கள் அவரை கவனியாது அவர்களைக் குறித்து கவலையின்றி தடைகளாக இருக்கின்றோம்.

**அனைவரும்:** எங்களது உண்மையற்ற ஆன்மீகத்தை மன்னித்தருளும் கடவுளே...

**ஆராதனை நடத்துபவர்:** இயேசுவானவரிடம், திமிர்வாதக்காரனை கொண்டு வர முடியாத சூழலில், கூரையைப் பிரித்து கயிறு கட்டி அவர் முன் கொண்டு வந்தனர்.

**சபை:** இன்றும், நமது பார்வைகள் ஒருதலைப் பட்சமாக உள்ளன. தேவைப்படும் மக்களுக்கு நாம் உதவி செய்ய தருணங்களை நினையாதிருக்கிறோம். கடவுளே இந்தக் குறுகிய நோக்கத்தை மன்னித்தருளும்.

**பாவ விமோசனம் கூறுதல்:**

உண்மையாய் தங்கள் பாவங்களை விட்டு மனந்திரும்புவோரை கர்த்தர் மன்னிக்கிறார். அவர் நம்மை சுத்திகரிக்கின்றார். இனி நாம் பாவம் செய்யாதபடி நம்மை வழிநடத்துவாராக! ஆமென்....



created with nitroPDF professional
download the free trial online at nitropdf.com/professional

**மன்றாட்டு ஜெபம்:**

வழக்கமான மன்றாட்டுகளை பயன்படுத்தவும். ாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு மன்றாட்டுகளையும் பயன்படுத்தவும்..

**முடிவு ஜெபம்:**

படைப்பின் தேவனே, நாங்கள் அனைவரும் வெவ்வேறு குறைபாடுகளை கொண்டிருந்தாலும் கிறிஸ்துவுக்குள் ஒன்றே என்பதனை நினைவுபடுத்தியதற்காக நன்றி. நாங்கள் உம் சாயலின் படைக்கப்பட்டிருக்கிறோம். உம்முடைய கண்களினால் மற்றவர்களிடம் கரிசனை மற்றும் அன்புடன் காண உதவிபுரியும். இம்மாறுதல் எல்லோரையும் இணைக்கும் மைல்கற்களாக அமைய உதவி புரியும். எல்லோரையும் பலவிதமான குறைபாடுகள் நடுவிலேயும் ஒன்று சேரும். எங்களுடைய வேறுபாடுகளை இருந்தாலும் உம்மை சந்தோ'ப்படுத்தி குறைபாடுகளை கொண்டவர்களை மதித்து உம்முடைய சபையிலும், சமுதாயத்திலும் நடத்த உதவி புரியும். கிறிஸ்துவின் வழியாய் ஆமென்.

**ஆசீர்வாதம்:**

எல்லாப்புத்திக்கும் மேலான தேவசமாதானம் உங்களோடுகூட இருந்து நீங்கள் தேவனையும் அவருடைய குமாரனாகிய நம்முடைய நாதர் இயேசுகிறிஸ்துவை பற்றிய அறிவிலும் அன்பிலும் நிலைத்திருக்கும்படி உங்கள் இருதயத்தையையும், சிந்தையையும் காக்கக்கடவது…. நாங்கள் உமது படைப்பின் முழுமையை அறியச்செய்தருளும். அனைவரையும் உமது சாயலாய் படைத்தீர் என்ற உணர்வோடு நாங்கள் குறையுள்ளோரை ஏற்றுக்கொள்ளவும், எவ்விதப் பாரபட்சமுமின்றி ஏற்றுக்கொள்ளவும் ஒரு புதிய சமுதாயத்தை உருவாக்கத் துணை புரிந்தருளும்..

திரியேக கடவுளின் ஆசீர்வாதம் நம்மோடு இருப்பதாக… சர்வ வல்லமையுள்ள பிதாவின் சாயலில் நம்மை உருவாக்கி மாற்றுத் திறனாளிகளின் மத்தியில் செய்யப்படும் ஊழியத்திலும் நிலைத்திருப்போமாக!.... நாம் குறைவுள்ளவர்களாக இருப்பதை ஏற்றுக்கொண்டு குறைகளை ஏற்று நம்மை மாற்றிய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் ஆசீர்வாதமும் நம்மில் உரிய சாயல் உண்டாக புதிய இருதயத்தை உருவாக்கும் தூய ஆவியானவரின் ஆசீர்வாதம் நம்மோடு இருப்பதாக. இன்றும் என்றும் நம்மோடு இருக்கும் திரியேக கடவுளின் ஆசீர்வாதம் நம்மோடு இருப்பதாக!... ஆமென்….

-------------------

**வெளியீடு:** NCCI – IDEA, நாக்பூர் **தமிழாக்கம்:** Rev.G.V. சவரிராயன், மதுரை



created with nitroPDF professional
download the free trial online at nitropdf.com/professional